| | வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை<br>இணைந்து வழங்குபவர்கள்<br>பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை<br>ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்<br>ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| MSSRF<br>Science for Sustainable Development | மாவட்டம் : | தேனி | காலம் : | 07/09/2022 | முதல் | 11/09/2022 |
| | அறிக்கை எண் : | 071/ 2022 | வெளியீட்டு நாள் : | | 06/09/2022 | |

## தேனி மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 29° - 36° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 23° - 25° செல்சியஸ் ஆகவும் பதிவானது. மேலும் மழை பெறப்பட்டது.

| கடந்தவார வானிலை (01.09.2022 முதல் 05.09.2022) | | | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு – 11-09-2022- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01/09 | 02/09 | 03/09 | 04/09 | 05/09 | தேதி | நாள்-1 07/09 | நாள்-2 08/09 | நாள்-3 09/09 | நாள்-4 10/09 | நாள்-5 11/09 |
| 18.5 | 4.7 | 7.3 | 0.3 | 4.9 | மழை (மி.மீ) | 25 | 12 | 10 | 6 | 6 |
| 34 | 29 | 34 | 34 | 36 | அதிக பட்ச வெப்பநிலை (செல்) | 29 | 29 | 30 | 30 | 32 |
| 24 | 23 | 24 | 25 | 24 | குறைந்த பட்ச வெப்பநிலை (செல்) | 21 | 21 | 22 | 22 | 22 |
| 7 | 7 | 4 | 4 | 5 | மேக மூட்டம் (ஆக்டா) | 7 | 7 | 6 | 6 | 5 |
| 93 | 90 | 80 | 65 | 72 | அதிக மற்றும் குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (சதவீதம்) | 75 | 75 | 75 | 75 | 75 |
| 68 | 56 | 50 | 56 | 80 | | 65 | 65 | 65 | 65 | 65 |
| 2 | 6 | 5 | 4 | 6 | காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 12 | 12 | 12 | 12 | 12 |
| தென் கிழக்கு | தெற்கு | தென் கிழக்கு | வட கிழக்கு | தென் கிழக்கு | **காற்றின் திசை** | மேற்கு | மேற்கு | மேற்கு | மேற்கு | மேற்கு |

## குறுஞ்செய்தி :

மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் அடுத்த 5 நாட்களுக்கு லேசானது முதல் மிதமான மழைக்கு வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலையானது 29°-33° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலையானது 21°-22° செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். மணிக்கு 12 கி.மீ வேகத்தில், மேற்கு திசையிலிருந்து காற்று வீசக்கூடும்.

## கனமழை எச்சரிக்கை:

மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் செப்டம்பர் 7 தேதி கனமழை முதல் மிக கனமழையும் மற்றும் 8, 9 ம் தேதிகளில் கனமழை பெய்ய வாய்ப்பு. விவசாயிகள் துரிதமாக செயல்பட்டு நீர் வரத்து வாய்க்கால்கள், பண்ணைக்குட்டைகள் மற்றும் நீர்நிலைகளை சரிசெய்து மழைநீர் சேகரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும். இந்த காலகட்டத்தில், உரமிடுதல் மற்றும் பூச்சிமருந்து தெளிக்கும் வேலைகளை ஒத்தி வைக்கும்படியும், விளைநிலங்களில் மழைநீர் தேங்கி பயிர்களை சேதப்படுத்தாத அளவில் தேவையான வடிகால் வசதிகளை ஏற்படுத்தி கொள்ளும்படியும்,

கால்நடைகளை மேய்ச்சலுக்கு வெளியில் அனுப்பாமலும், மின்கம்பம் மற்றும் மரங்களில் கட்டாமலும் பாதுகாப்பாக கொட்டகைகளில் கட்டி வைக்கும்படியும் கேட்டுகொள்ளப் படுகிறார்கள்.
மாவட்டத்தின் ஒருசில பகுதிகளில் மழை பெய்துள்ளமையாலும் தொடர்ந்து சில நாட்களுக்கு மழை எதிர்பார்க்கப்படுவதாலும் இதுவரை உழவுபணிகளை மேற்கொள்ளாதவர்களும் விதைக்க துவங்காத விவசாயிகளும் தற்போது உழவுபணிகள் (ம) விதைப்பு பணிகளை மேற்கொள்ளலாம்.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**
**முக்கிய பயிர்கள்** : மக்காசோளம், **பருத்தி**, கால்நடை.

மக்காசோளம்:

- மக்காசோளம் நடவு செய்துள்ள விவசாயிகள் 1 ஏக்கருக்கு 5 கிலோ சிறுதானிய நுண்ணூட்டம் அல்லது 10 கிலோ சிங்க்சல்பேட் நுண்ணுரத்தினை கொடுப்பதன் மூலம் நுண்ணூட்டசத்து குறைபாட்டை நிவர்த்தி செய்யலாம்

**பருத்தி:**

- பருத்தியில் உள்ள ஊட்டச்சத்து குறைபாட்டை சரிசெய்ய, பருத்தி பயிரிட்டுள்ள விவசாயிகள் விதைத்த நாளிலிருந்து 10 நாட்களுக்குள் நுண்ணூட்டச் சத்துக்களை இடவேண்டும்.
- ஏக்கருக்கு 5 கிலோ பருத்தி நுண்ணூட்டம் அல்லது 20 கிலோ மெக்னீசியம் சல்பேட் உரத்தினை வைத்து நுண்ணூட்டசத்து குறைபாட்டினை நிவர்த்தி செய்யலாம்.

.கால்நடை:

- தற்போது பெய்துள்ள மழையின் காரணமாக பசுந்தீவனம் மிகுதியாக கிடைக்கும்.
- எனவே பசுந்தீவனத்தை கால்நடைகள் அதிகமாக உண்ணும் வாய்ப்பு உள்ளது.
- இதன் காரணமாக வயிற்றுப் போக்கு மற்றும் அசிடோசிஸ் நோய்கள் வருவதற்கான வாய்ப்பு அதிகம்.
- விவசாயிகள் தங்களது கால்நடைகளுக்கு பசுந்தீவனத்தை குறைத்து அதிக அளவிலான உலர் தீவனங்களை கொடுக்க வேண்டும்.